**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 44, 47, 49, 52 /2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.முத்துகுமரன் |
| Husband/Father Name | ராஜேந்திரன் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 50 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.02.2026.

**(எதிரிகள் 3 முதல் 10 வரை ஆஜர். எதிரி 1 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

முதல் விசாரணை :

நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னை சாஸ்திரி பவனில் உள்ள Pay and Account அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராம்குமார் என் தம்பு ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 15.10.2015ம் தேதி எனது சகோதரரை வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டு அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது தம்பி இறந்துவிட்டார். எனது தம்பியை 15 நபர்கள் சேர்ந்து பஜாரில் வைத்து வெட்டியதாக போலீசார் சொன்னார்கள். யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

போலீசார் விசாரணையில் எனது தம்பி ராம்குமார் அரக்கோணம் மார்க்கெட்டில் பைனான்ஸ் கடை வைத்து நடத்தி வந்ததாகவும் நான் அவருடன் இருந்து வந்ததாகவும் அந்த கடையில் வேலை செய்த மதன் (எ) மதன்குமார் மற்றும் அவருடைய நணபர் பச்சை (எ) ராமமூர்த்தி என்பவரும் எனது தம்பியிடம் ரூ.3 லட்சம் பணம் கேட்டு தொந்தரவு செய்து வந்ததாகவும் இந்நிலையில் 15.10.2015ம் தேதி எனது தம்பி ராம்குமார் அவருடைய நண்பர் அன்பரசு பைனான்ஸ் பணம் வசூலிக்க தனித்தனி மோட்டார் இருச்சக்கர

வாகனத்தில் இரவு 7.15 மணிக்கு பஜார் தெரு வழியாக சென்றதை பார்த்து நான் அவர்களுக்கு பின்னால் சென்றேன் என்றும் அப்போது என் தம்பிக்கு பின்னால் பச்சை (எ) ராமமூர்த்தி, மதன்குமார், சரத் (எ) சரத்குமார், மகி, சுரேஷ், டிங்கு ஆகியோர் மோட்டார் சைக்கிளில் வேகமாக போவதை பார்த்து நான் சந்தேகத்துடன் ஓடி சென்று பார்த்தபோது எனது தம்பி ராம்குமாரையும் அன்பரசையும் அவர்கள் அனைவரும் வழிமறித்து அசிங்கமாக பேசி எங்களுக்கு பணம் கொடுக்கமாட்டியா என்று சரமாரியாக கத்தியால் வெட்டிவிட்டு கும்பல் வரவே அவர்கள் அனைவரும் ஓடிவிட்டதாகவும் பலத்த காயமடைந்த எனது தம்பி மற்றும் அன்பரசையும் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்துபோது எனது தம்பி இறந்துவிட்டதாகவும் அன்பரசை மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் இது சம்மந்ததமாக எனது தம்பியின் பிரேத விசாரணையின் போது உடனிருந்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

மருத்துவமனைக்கு சென்று தான் இறந்து போன ராம்குமாரை பார்த்தேன் என்று சொன்னால் சரிதான். நான் சென்று பார்க்கும் போது சுமார் இரவு 8 மணி இருக்கும். அப்போது போலீசார்கள் இருந்தார்களா என்றால் சரிதான். அப்போது போலீசாரிடம் கேட்ட போது 4, 5 நபர்கள் வெட்டிவிட்டதாக சொன்னார்கள். எல்லா எதிரிகளையும் காவல் நிலையத்தில் கைது செய்து வைத்திருப்பதாக சொன்னார்கள். மற்றபடி இந்த வழக்கை பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.20 19:10:23 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.